**தமிழ்நாடு மொழித்தொழில்நுட்ப புத்தாக்க நிதி**
**தமிழ் மொழித் தொழில்நுட்பத்தில் புதுமைகளை ஊக்குவித்தல்**

**Tamil Nadu LangTech Startup Fund**
**Empowering Innovation in Tamil Language Technology**

**நோக்கம்:**

- புதுமைகளை ஊக்குவித்து, டிஜிட்டல் வளங்களைப் பாதுகாத்து, புத்தொழில் நிறுவனங்களை ஆதரித்து செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல் வாயிலாக தமிழ் மொழியின் எதிர்காலத் தடத்தை வடிவமைத்தலே நோக்கமாகும்.

**Objective:**

- Our mission is to nurture innovation, preserve Tamil's digital presence, and accelerate startups shaping the future of Tamil in AI & Machine Learning.

**திட்டம் குறித்து:**

இயற்கை மொழிச் செயலாக்கம் (NLP), செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி மொழி மாதிரிகள் (LMs) உருவாக்கம் உள்ளிட்ட தமிழ் மொழித் தொழில்நுட்பம் சார்ந்து புதுமையான தீர்வுகளை உருவாக்கும் புத்தாக்க நிறுவனங்களுக்கு, ரூ.2.5 கோடி நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டம்.

**About the Initiative:**

The Government of Tamil Nadu has launched a ₹2.5 Crore Corpus Fund to support LangTech Startups developing cutting-edge solutions, Language Models (LMs) for Tamil using Natural Language Processing (NLP) and Artificial Intelligence (AI).

**வாய்ப்புகள்:**

- தமிழில் உலகத்தரம் வாய்ந்த செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை உருவாக்குதல்.
- TVA, Startup TN மற்றும் இந்தியா-உலகளாவிய வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
- மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் செயலாற்ற நிதி பெறுதல்.

**This is your chance to:**

- Build world-class AI tools in Tamil.
- Collaborate with TVA, Startup TN & Global Experts.
- Secure funding to scale your vision.

**செயல்படுத்தும் அமைப்புகள்:**

- தமிழ் இணையக் கல்விக்கழகம்
- தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனம்

**It is to be implemented by:**

- Tamil Virtual Academy (TVA)
- Startup TN

**விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்:**

- ✓ Startup TN / Startup India–வில் பதிவு செய்யப்பட்ட புத்தாக்க நிறுவனங்கள்.
- ✓ தமிழ் மொழித் தொழில்நுட்பங்களை மையப்படுத்தி செயல்படும் நிறுவனங்கள்.

**Who Can Apply:**

- ✓ Registered with Startup TN or Startup India.
- ✓ Focusing on Tamil Language Technologies.

**புத்தாக்கத் தளங்கள்:**

- தமிழ் மொழிமாதிரிகள் & AI அடிப்படையிலான கருவிகள்.
- இயந்திர மொழிபெயர்ப்பு & உரையாடி போன்ற கருவிகள்.
- தமிழ் பேச்சறிதல் (Speech Recognition) மற்றும் பொருள் அறிதல் (Text Mining), மறு ஆக்கம் செய்தல் (Paraphrasing) போன்ற கருவிகள்.

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருவிகள் உத்தேசப் பட்டியலாகும். விரிவான பட்டியலுக்கு விண்ணப்பதாரர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அரசாணையினைப் பார்க்கவும்.

**Innovating areas:**

- Tamil LLMs & AI Tools
- Machine Translation
- Chatbot Tool
- Tamil Speech Recognition, Text Mining & Paraphrasing Tools.

Note: The above areas are indicative in nature. Applicants are advised to refer to the detailed list of innovative areas in the Government Order provided below.

Government Order: https://drive.google.com/file/d/11l7gav2CZO5FzQ7kddVL9pZlBkVwVeYj/

**உதவிகள்:**

**பங்கு முதலீடு / மானியங்கள்:**

- தொடக்க நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தை வேகப்படுத்தும் மூலதனம்.
- உற்பத்திப்பொருள் மேம்பாடு, ஆய்வு–முன்மாதிரி உருவாக்கம், மற்றும் அறிவுசார் சொத்து உருவாக்கத்திற்கான நிதி.

**What You Get:**

**Equity Investments / Grants:**

- Fuel growth with capital & scale faster for the Startups.
- Secure funding for Product Development & Intellectual Property (IP) creation.

**வழிகாட்டல்:**

- செயற்கை நுண்ணறிவு, ஆராய்ச்சி, தொழில்முனைவு ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்களின் வழிகாட்டுதல்.

**Mentoring:**

- Guidance from experts in AI, research, and industry.

**உலகளாவிய வெளிப்பாடு:**

- தமிழ்நாட்டின் மொழித்தொழில்நுட்ப சூழலமைப்பில் உலகளாவிய அங்கீகாரம் பெறும் வாய்ப்பு.

**Global Visibility**:

- Be a part of Tamil Nadu's LangTech innovation ecosystem.

**தேர்வு செய்யப்படும் முறை:**

- விண்ணப்பம் ஆரம்பக்கட்ட ஆய்வு.
- தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் தமிழ்நாடு புத்தொழில் & புத்தாக்க நிறுவனம் இணையதளங்கள் மூலம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்க வேண்டும்.

**சுற்று – I : முதலீட்டுக் குழு**

- தகுதி, தொழில்நுட்பப் புதுமை, செயல்படுத்தும் திறன் ஆகியவை மதிப்பாய்வு செய்யப்படும்.

**சுற்று – II : திட்ட அனுமதிக் குழு**

- இறுதி ஆய்வு, நிதி ஒப்புதல் மற்றும் நிதியுதவி வடிவம் தீர்மானிக்கப்படும்.
- தேர்வு செய்யப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி, வழிகாட்டல், தேவையான ஆதரவு வழங்கப்படும்.

**Selection Process:**

- Application & Screening
- Submit proposals online via TVA & Startup TN websites.

**Round I: Investment Committee**

- Initial screening of eligibility, innovation, feasibility.

**Round II : Project Sanction Committee**

- Final due diligence & funding approval.
- Selected startups will receive structured funding, mentorship, and monitoring to ensure success.

**நம்பகத்தன்மை & இணக்கம்:**

- தரவுப் பாதுகாப்பு, நெறிசார் செயற்கை நுண்ணறிவுச் செயல்முறைகள், வணிக உத்திகள் ஆகியவற்றைப் பாதுகாக்க, தேர்வுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இரகசியத்தன்மை வெளிப்படுத்தாமை உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டும்.

**Integrity & Compliance:**

- Selected applicants must sign a Confidentiality & Non–Disclosure Agreement (NDA) to protect business ideas, data privacy, and ensure ethical AI practices.

**விண்ணப்பிக்க:**

தமிழ்நாட்டின் மொழித்தொழில்நுட்பப் புரட்சியின் ஒரு முக்கிய பகுதியாகுங்கள்.

தமிழின் செயற்கை நுண்ணறிவு எதிர்காலத்தை உருவாக்கும் பயணத்தில் இணையுங்கள்.

**Apply Now:**

Be a part of Tamil Nadu's LangTech Revolution.

Shape the future of Tamil in AI Technology.

| | |
|---|---|
| **தமிழ் இணையக் கல்விக்கழகம்**<br>தகவல் தொழில்நுட்பவியல் & டிஜிட்டல் சேவைகள் துறை | **தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனம் (Startup TN)**<br>குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை |
| தமிழ்நாடு அரசு | |

| | |
|---|---|
| **Tamil Virtual Academy**<br>Information Technology & Digital Services | **Startup TN**<br>Department of Micro, Small & Medium Enterprises |
| **Government of Tamil Nadu** | |

**பதிவு செய்ய / To Register:**

https://forms.gle/4ejrbJqDAfZ8h4BRA

**To Contact / தொடர்புக்கு:**

Email Id : kanitamiltva@gmail.com
Phone No: 044 – 2220 9400.

**Note:**

Applications received on or before 7th January 2026 will be duly scrutinized and taken forward for screening as part of the First Batch, whereas applications submitted after 7th January 2026 will be considered in the subsequent batches and the screening details will be conveyed later.